விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 26 வெள்ளிக்கிழமை (11.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 235

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வான், ஷெல் தாக்குதல்களில் 120 தமிழ் மக்கள் உயிரிழப்பு

## ஈச்சிலம்பற்றில் பிணக்குவியல்

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட வான் மற்றும் ஷெல் தாக்குதல்களில் 120 தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். நேற்று காலை முதல் மாலை வரை மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலிலேயே ஈச்சிலம்பற்று, கதிரவெளியைச் சேர்ந்த மக்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். சில மணி நேரத்தில் மட்டும் பெருமளவானோர் உடல் சிதறிப்பலியானதாக தெரிவிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் உக்கிர மோதல்

(திருகோணமலை)

மாவிலாறு அணையைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தினரால் நேற்று பாரிய தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பில் வெருகல், வாகரைப் பகுதியிலும் இராணுவத்தினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் இரு இடத்திலும் உக்கிரமோதல் இடம் பெற்று வருவதாக களமுனையை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இரண்டு தமிழ் இளைஞர்கள் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். உப்புவெளி அலெஸ் தோட்டத்தில் நேற்று பிற்பகல் 1.20 மணியளவில் இரு வரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் கருப்பையா தனேஸ் (வயது 26) மற்றும் சந்திரன் சாந்தருபன் (வயது 30) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## மாவிலாறு திறக்கப்பட்டமைக்கு ஐ.தே.கட்சி மகிழ்ச்சி தெரிவிப்பு

(கொழும்பு)

மாவிலாறு அணைக்கட்டு திறக்கப்பட்டதன் மூலம் அப் பகுதியில் பாதிப்படைந்த மக்களுக்கு விமோசனம் கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் அரசு தீர்க்க மறுத்ததையும் அக்கட்சி கண்டித்துள்ளது. இதுபோன்ற பிரச்சினைகளைக்கூட பேசித்தீர்க்க முடியாத ஒரு அரசு நாட்டின் இனப்பிரச்சினையை எப்படி பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்போகிறது என்றும் அக்கட்சியின் முக்கிய உறுப்பினரான லக்ஷ்மன் கிரில்ல (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆயுதக்களஞ்சியம் நேற்றிரவு வெடித்துச் சிதறியது

கந்தளாய் அருகே உள்ள அல்லைப் பகுதியில் அமைந்திருக்கும் இராணுவத்தின் ஆயுதக்களஞ்சியம் ஒன்று பாரிய சத்தத்து டன் வெடித்துச் சிதறி எரிந்து கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றிரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆயுதக்களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடிப் பையடுத்து அங்கு வைக்கப்பட்டிருந்த நவீன ரக ஆயுதங்கள் உட்பட [illegible] வெடித்துச்சிதறிபற்றி எரிவதாக கூறப்படுகிறது.

தமது ஆயுதங்களஞ்சியம் வெடித்துச் சிதறிக்கொண்டிருப்பதை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோரில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோயிலடி அரசடி வீதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

*தரம் -5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்*

## மத்திய கல்லூரி மாணவர்கள் போராட்டம் பொலிஸ்; இராணுவ அதிகாரிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் இராணுவம் மற்றும் பொலிஸ் சந்திப்பையடுத்து இடைநிறுத்தப்பட்டது.

யாழ்.பொலிஸ் நிலையம் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாக யாழ். மத்திய கல்லூரிக்குச் செல்லும் பாதை மூடப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் அப் பாதை வழியே தடையின்றிச் செல்லக்கூடிய விதத்தில் அவ் வீதி திறக்கப்படவேண்டும். மத்திய கல்லூரி விடுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் அங்கிருந்து அகற்றப்படவேண்டும், வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே மத்திய கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் யாழ்.51ஆவது படைப்பிரிவு தளபதி ஆகியோர் மாணவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை


(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்று கொண்டிருந்த கடைச்சல் பட்டடையாளர் ஒருவரை இனந் தெரியாதவர்கள் விரட்டிச்சென்று சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சண்டிலிப்பாய் மத்தி குறிஞ்சி தொலைத்தொடர்பு நிலையம் முன்னால் நடைபெற்றது.

கொலையுண்டவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னராசா (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



மூன்று அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மத்திய கல் லூரிக்கு முன் மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதையும் யாழ்ப் பாண 51ஆவது படைப்பிரிவு தளபதி மாணவர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)

# மாவிலாறு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

மாவிலாறு ஆணைக்கட்டை மூடியதால் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்றுக்கொண்ட கடன்கள் இரத்துச்செய்யப்படவுள்ளது.

விவசாயிகள் வர்த்தக வங்கிகளிலிருந்தும், கூட்டுறவு அமைப்புக்களிலிருந்தும் பெற்ற கடன்கள் இரத்துச் செய்யப்பட்டவுள்ளதாக அமைச்சர் எஸ்.என்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் மாவிலாறு பிரதேசத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் பாதிக்கப்பட்டவர்களுக்கு கமநல காப்புறுதி சபையூடாக இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளித்தார்.

மாவிலாறு விவசாயிகளுக்கு நஷ்ட ஈடுவழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதன் பிரகாரம் பிரதேச விவசாயிகள் தொடர்ந்து கமச்செய்கையில் ஈடுபட அரசாங்கம் முழு ஒத்துழைப் பையும் வழங்குமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# சீரற்ற பஸ்சேவை

(ஊர்காவற்றுறை)

இலங்கைப் போக்குவரத்து சபை வடபிராந்திய ஊர்காவற்றுறை பஸ்கள் நேர ஒழுங்கின்படி ஓடாமையால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் தனியார் சேவை ஊழியர்கள் எனப் பலதரப்பட்ட பயணிகள் மற்றும் அவசர நோயாளி கள் ஆகியோர் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை தனியார் சிற்றூர்திக்ள் காலை 6.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை சேவையிலீடுபட்டு வருவது குறித்து பயணிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வழி இல 780 பாதை சீரில்லாத போதிலும் பயணிகள் நன்மை கருத்தி மினிபஸ் சேவை சீராக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (து-72)

# தூவல் நீர்ப்பாசனம் மூலம் அமோக விளைச்சல்

(இணுவில்)

தூவல் நீர்ப்பாசனமூலம் இம்முறை இணுவில் கிழக்கில் பயிரிடப்பட்ட வெங்காயம் அமோக விளைச்சலினை விவசாயிகளுக்கு பெற்றுத்தந்துள்ளது.

குறிப்பாக இணுவிலைச்சேர்ந்த ஜெயா என்பவர் நான்கு பரப்பு காணியில் அறுபது அந்தர் வெங்காயம் பயனாக பெற்றுள்ளார்.

இவரது காணியைத் தினமும் பல விவசாயிகள் சென்று பார்வையிட்டுவருகின்றனர். தூவல் நீர்ப்பாசன முறை மூலம் நீரைச் சேமிப்பதுடன் அதிக இலாபம் பெற்றதாகவும் இந்த விவசாயி கருத்துத் தெரிவித்தார். (து-122)

# இராசி பலன்

11.08.2006
(ஆடி 26, வெள்ளிக்கிழமை)
துதியை பி.ப. 12.59 மணிவரை
சதயம் பிற்பகல் 4.02 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரியசித்தி, பெரியோர் உதவி, நல்ல வருமானம், போசனசுகம். |
| இடபம் | அதிகாரம், நல்லசெய்தி, காரியசித்தி, நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | புதிய முயற்சி, அதிகசெலவு, உறவினர் சந்திப்பு, சரீரப்பிரயாசை. |
| கடகம் | பிதாசிந்தை, முயற்சி தடங்கல், நம்பிக்கைக்குறைவு, போசனசுகம். |
| சிங்கம் | செல்வாக்கு, குடும்பசுகம், பொருள்சேர்க்கை, சுபசெய்தி. |
| கன்னி | செய்தொழில் விருத்தி, சத்துருஜெயம், தேகநலன், முயற்சிபலிதம். |
| துலாம் | மனச்சஞ்சலம், காரியதாமதம், பணவிரயம், குடும்பக்கவலை. |
| விருச்சிகம் | சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு, மனச்சஞ்சலம், |
| தனுசு | பொருள் உதவி, நல்லசெய்தி, காரிய அனுகூலம், நல்லவருமானம். |
| மகரம் | விவாதம், வேலைச்சுமை, முயற்சிதாமதம், பணவிரயம். |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, செல்வாக்கு, பொருள சேர்க்கை, தேகநலம். |
| மீனம் | மனச்சஞ்சலம், நண்பர்கள் சந்திப்பு, காரியதாமதம், சயனசுகக்குறைவு. |

- வளவன்

# தன்னார்வப் பணியாளர் கொலைபற்றி விசாரணை நடத்த அரசாங்கம் முடிவு

மூதூரில் இடம்பெற்ற தன்னார்வப் பணியாளர்கள் 15 பேரின் உயிரிழப்புத் தொடரில் திடகாத்திரமான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் தெரி வித்துள்ளது.

இந்தத் தன்னார்வ நிறுவனப் பணி யாளர்களின் கொலை தொடர்பான விசாரணைகள் அவுஸ்திரேலிய நிறுவன நிபுணர்களின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தை மதிக்கும் அரசாங்கம் என்ற வகையில், இந்த கொலைகள் தொடர்பில் அமைதியான நடைமுறையைக் கையாள முடியாது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்தக் கொலைகள் குறித்து அரசாங்கம் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (து-7)

# மீறப்படும் போக்குவரத்து விதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் பின்பற்றப்பட்டுவந்த ஒருவழிப்பாதைகள் மற்றும் நடைபாதைகள் என்பன சீர்குலைத்துள்ளன.

குறிப்பாக ஒருவழிப் பாதையான காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, பழைய தபால்நிலையவீதி என்பன தற்போது இருவழிப்பாதையாக சைக்கிள்கள் வாகனங்கள் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் இவ் வீதிகளில் போக்குவரத்தில் பெரும் நெருக் கடி ஏற்பட்டுவருகிறது.

தற்போது வீதிகடமையில் பொலிஸார் ஈடுபடுவதில்லை என்பதை அறிந்தே இவ்வாறு வீதிகள் மீறப்படுவதாக பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (து-122)

# தூவல் நீர்ப்பாசன வசதி

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட இணுவில் கிழக்குப் பகுதி விவசாயிகள் பலர் தங்களுக்கு மானிய அடிப்படையில் தூவல் நீர்பாசன வசதியைப் பெற்றுத் தருமாறு சம்மேளனத் தலைவர் செ. சி.திருக்குமாரிடம் விண்ணப்பங்களை கையளித்துள்ளனர்.

இவ் விண்ணப்பங்கள் தொடர்பாக தாம் கமநல சேவைகள் நிலையத்துடன் தொடர்புகொண்டு விரைவில் பெற்றுத்தருவதாக சம்மேளனத் தலைவர் விவசாயிகளுக்கு உறுதியளித்துள்ளார். (து-122)

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதின்மூன்றாம் திருவிழா



## நேராக நல்லூர் போங்கள்



நிம்மதி வேண்டும் என்றால்
நேராக நல்லூர் போங்கள்
உம்மனப் பாரம் எல்லாம்
உடனடி யாக நீங்கும்
சும்மா நீசென்று பாரும்
சுந்தர முருகன் உன்னை
தம்பால் ஈர்த்துக் கொண்டு
தன்னருள் தந்து நிற்பான்!

கவிஞர் வ.யோகானந்தசிவம்

## அல்லல் அறுக்கும் அரிய அமுதம்



கற்றார் நெஞ்சில் காணும் கந்தன்
குற்றம் நீக்கிக் குணங்கள் கூட்டும்!
கொன்றை சூடி கொடுத்த குமரன்
என்றும் ஏத்த ஏகு மிடும்பை!
நல்லூர் உறையும் நம்பி நல்லடி
அல்லல் அறுக்கும் அரிய அமுதம்!

சிவசண்முக வடிவேல்

## வேலவனின் திருமுகம்

அழகு மயிலுடனே அணிசேர்க்கும் ஒருமுகம்
அணங்கு தெய்வயானையுடன் விளங்கும் திருமுகம்
ஆனைமுகன் பின்னவனாய் அமைந்த ஒருமுகம்
அஞ்சுகின்ற மானிடர்க்கு அருளும் திருமுகம்
பாசம் பிணியகற்றும் பாலகனின் ஒருமுகம்
பக்தர்களை காத்திடும் வேலவனின் திருமுகம்!

குகதாச சர்மா சிவகுமார்.

## வேலவனே வேண்டும் அருள்!

*அமரரைக் காத்த சண்முக சுந்தரனே*
*எமதிடர் தீர்த்திட வாராயோ? - உமையவளின்*
*பாலகனே நல்லைப் பதிவாழும் பெருமானே*
*வேலவனை வேண்டும் அமைதியருள்!*

*நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.*

## "அருகே வருவான் அறி!"

விண்ணவர் தலைவனை வீரனாம் வேலவனே
எண்ணியவை எல்லாம் ஈந்தருளும் - சண்முகனை
நல்லைப்பதி நாடிநிதம் பணிந்து வந்தால்
நல்லவை அளிப்பான் நன்றே!

வள்ளி நாயகனை மாலவன் மருகனை
புள்ளி மயிலேறும் புனிதனை - உள்ளம்
உருகி அப்பனே உமைபாலா வாவென்றால்
அருகே வருவான் அறி!

அரியாலையூர் சி.சிவதாசன்

# நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவ கால பதின்மூன்றாம் நாள் நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப்பிரார்த்தனை' நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'சிந்தை மகிழும் சங்கத்தமிழ்' என்னும் தலைப்பில் சிறப்பு சொற் பொழிவினை இளஞ் சொற்பொழிவாளர் சி.சஜீவன் நிகழ்த்துவார். பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து அபிவிருத்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (து-133)

## இன்று ஒரு தகவல்

# நிழல் மனிதர்கள்

ஒருவன் வேகமாக ஓடிவந்தான் "ஏனப்பா இப்படி தலை தெறிக்க ஓடி வருகிறாய்?" என்று கேட்டேன்.

"பின்னாலே துரத்திக்கொண்டு வருகிறது சார்!" என்றான். ஏதாவது நாய் துரத்திக் கொண்டு வருகிறது போல இருக்கிறது என்று நினைத்து அவனுக்குப் பின்னால் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதுவும் தெரியவில்லை. "எதுவும் உன்னைத் துரத்தவில்லையே...!" என்றேன். "நன்றாகப் பாருங்கள் சார்" என்றான். "பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்" என்றேன். "இதோ பாருங்கள் சார் இது தான் என்னைத் துரத்துகிறது" என்றான். அவன் சுட்டிக்காட்டின இடத்தில் பார்த்தேன் அங்கு அவனுடைய நிழல்தான் தெரிந்தது.

"என்னப்பா சொல்கிறாய்?" என்று அவனைக் கொஞ்சம் சந்தேகமாக பார்த்தேன். அதற்கப்புறம் அவன் விவரமாகச் சொன்னான் "சார்... எனக்கு என் நிழலைக் கண்டால் பிடிப்பதில்லை... எப்போது பார்த்தாலும் இது என்னையே பின்தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இதை என்னால் சகிக்கவே முடியவில்லை...இதை என்னிடமிருந்து பிரிப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்து விட்டேன்.... முடியவில்லை!" என்றான். "அப்படி என்னென்ன முயற்சிகள் செய்தாய்?" என்று கேட்டேன். அவன் என்னென்ன செய்தான் என்பதை விவரமாகச் சொன்னான். அவன் என்ன செய்திருக்கிறான்.

ஒரு பெரிய குழியைத் தோண்டி அதிலே தன்னுடைய நிழலைப் புதைத்து விடுவோம் என்று முடிவுசெய்து கொண்டு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தோட்டப் பக்கம் போனான்.

ஆழமாக ஒரு குழியைத் தோண்டினான். குனிந்து பார்த்தான் அந்தக் குழிக்குள்ளே தன்னுடைய நிழல் தெரிந்தது! ஆகா... இது தான் சமயம்...நிழல் இப்போது குழிக்குள்ளே இருக்கிறது... மண்ணைப் போட்டு மூடிவிடலாம் என்று நினைத்துக் கொண்டு.... கொஞ்சம் மண்ணை அள்ளிப் போட்டான். பார்த்தான்... இப்போது அந்த நிழல் மண்ணுக்கு மேலே வந்திருந்தது! இது ஏதுடா வம்பாய்ப் போயிற்று என்று அவசர அவசரமாக மண்ணை வாரிப் போட்டான். குழி பூராவும் மூடிவிட்டுப் பார்க்கிறான்.... மறுபடியும் நிழல் மேலே வந்து உட்கார்ந்திருக்கிறது!

சரி... இதை குழியிலே புதைக்க முடியாது என்று முடிவு செய்துகொண்டு... இதை இங்கேயே இப்படியே விட்டு விட்டு ஓடிப்போய்விடுவோம் என்று நினைத்து எடுத்தான் ஓட்டம்!

அது காலை நேரம். இவன் மேற்கு நோக்கி ஓடியிருக்கிறான். ஓடி ஓடிப் பார்க்கிறான் நிழல் அவனை விட வேகமாக இவனுக்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்தது!

சரி... திரும்பி ஓடிப் பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டு... அப்படியே சடார் என்று திரும்பி ஓடஆரம்பித்தான். அப்பாடா... நிழலைக் காணவில்லை... கொஞ்சத் தூரம் ஓடி ஒரு இடத்திலே நின்று சாவகாசமாக திரும்பிப் பார்த்தான் பின்னாலேயே நிழல் துரத்துகிறது.

இப்படி ஓடி வந்துதான் இங்கு நம் முன்னால் நின்று தன்னுடைய அவஸ்தையை சொல்லிக்கொண்டு இருக்கிறான். "இந்த நிழலைத் துரத்த அல்லது வெட்டிவிட ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள் சார்!"என்றான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை... அந்த நேரம் பார்த்து ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் யோசனை கேட்போம் என்ன செய்யலாம் என்று.

அவர் சொன்னார். "நீ அங்கேயும் இங்கேயும் ஓடாதே... அப்படியே கீழே படுத்துக்கொள்!" என்றார். அது நல்ல உச்சிவேளை! அவன் அப்படியே படுத்துக்கொண்டான். இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தான். நிழலைக் காணவில்லை! அவன் இப்பத்தான் நிம்மதியாக இருந்தான். இப்போது அந்தப் பெரியவர் சொன்னார். எல்லா மனிதர்களுமே இப்படித்தான் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நான் - எனது அப்படி என்கிற ஆணவம் தான் அவர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறது... அதை விட்டுவிட்டு ஓடவேண்டும் என்று நினைத்தாலும் அது முன்னால் வந்து நிற்கிறது.

பரம்பொருளை நோக்கி ஓடும்போது இந்த ஆணவம் பின்னால் வந்து விடும். பரிபூரண சரணாகதி என்கிற நிலையிலே அது முழுதாக மறைந்துவிடும் ...தன்னை உணர்கிற வேளை அது... அந்த நேரம் மனிதனுக்கு விடுதலை உணர்வு ஏற்படுகின்ற நேரம். அப்படிப்பட்ட சுதந்திர மனிதர்களாக எல்லோரும் மாறிவிட்டால் இந்த உலகமே இன்பமயம்!

நம்ம ஆள் ஒருவன் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தான். "ஏனடா இப்படி ஓடி வருகிறாய்?" என்று கேட்டார் எதிரிலே வந்தவர்.

"ஆசை துரத்துகிறது அதுதான் ஓடிவருகிறேன்!" என்றான். "உனக்கு என்ன ஆசை?" என்று கேட்டார்.

"எனக்கு ஒன்றும் ஆசை இல்லை... என்னை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்று பொலிஸ்காரர்களுக்கு ஆசை! அந்த ஆசை இப்போது என்னைத் துரத்திக் கொண்டு பின்னால் வருகிறது! அதுதான் தப்பித்து வந்துகொண்டிருக்கிறேன்... குறுக்கே நிற்காதீர்கள்... வழிவிடுங்கள்!" என்று சொல்லிக்கொண்டே வேகமாக ஓடி மறைந்தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூதூர் முஸ்லிம் மக்களை பேரியல் அஷ்ரப் சந்திப்பு நிவாரண உதவிகளை துரிதப்படுத்துவதாக வாக்குறுதி

(கொழும்பு)

வட பகுதியில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்டநிலை மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கும் ஏற்பட நாமும் எமது அரசாங்கமும் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கந்தளாய்ப்பகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த பின்னர் கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.



கந்தளாய் அந்நஜா அரபுக் கல்லூரியில் தங்கியுள்ள அகதிகளின் குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் அகதி முகாம்களுக்கு தேவையான மலசல கூடங்கள் வீடமைப்பு அதிகார சபையூடாக நிர்மாணித்து தரப்படும் என உறுதியளித்தார்.

அத்துடன் சமையலுக்குத் தேவையான உபகரணங்கள் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஊடாகப் பெற்றுத் தரப்படும் எனவும் அவர் கூறினார்.

அங்கு அகதிகளின் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நிலை மூதூர் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட அரசாங்கம் ஒருபோதும் உடந்தையாக இருக்கமாட்டாது.

இன்னும் பத்து நாட்களுக்கு அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றும் அதுவரையும் பாதிக்கப்பட்டோருக்கு தேவையான அனைத் து மனிதாபிமான உதவிகளும் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

மூதூர் பகுதியில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக சுமார் 40ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்து கந்தளாய்ப் பிரதேசத்தில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு போதியளவிலான அடிப்படை வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(து)

## வன்செயல்களால் போ.நி.க.குழுவின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை

(கொழும்பு)

வன்செயல்களால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணிகளிலிருந்து விலக வேண்டுமென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் மாற்றமில்லாததன் காரணமாக தற்போது ஐஸ்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மாத்திரமே இலங்கையில் இருக்கிறார்கள் இதனால் போர்நிறுத்தக் கண்காணிப்பு செயற்பாடுகள் தற்காலிகமாக செயலிழந்துள்ளது.

குறைந்தபட்சம் 50 கண்காணிப்பாளர்கள் கடமையில் இருக்கவேண்டும். எவ்வாறேனும் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்று நோர்வேயின் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

(து-9)

## நவோதய பாடசாலைகளுக்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள்

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள 84 நவோதய பாடசாலைகளுக்கு 42 இலட்சம் ரூபா பெறுமதியான கல்வி கற்பிப்பதற்கான நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது.

பாடசாலைகள், வாசிகசாலைகள், கணனி பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றிற்குத் தேவையான வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், நகர்வு பதிவுக் கருவிகள் உட்பட பல்வேறு உபகரணங்களும் நவோதய பாடசாலைகளுக்குக் கல்வியமைச்சு வழங்கவுள்ளது.

நவீன தொழில்நுட்பக் கணனி அறிவு மயப்படுத்தும் திட்டத்தினடிப்படையில் மாணவர்கள் தங்கு தடையின்றி அக் கல்வி அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கேதுவாகவே இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன எனக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(து-9)

## பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்குமாறு இந்தியா வலியுறுத்தல்

(கொழும்பு)

பேச்சுவார்த்தையின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்குமாறு இந்தியா மீண்டும் இலங்கையை வலியுறுத்தியுள்ளது

இந்தியாவிற்கு சென்றுள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சரிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கொள்கையை இந்தியா ஏற்கனவே வலியுறுத்தி வந்தமையை இந்திய அமைச்சர் இலங்கை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் அனைத்து இனங்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான அதிகாரப்பகிர்வு ஒன்றுக்கான ஏற்பாடுகள் குறித்து இலங்கை அரசாங்கம் ஆராய வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

(து-9)









நேற்று முன்தினம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் தமிழ் செய்தித்தகவல் மையத்தின் ''புயலின் காகங்களும் மைனாக்களும்'' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் தமிழ் செய்தித் தகவல் மையப் பணிப்பாளர் எஸ்.கணநாதன் உரை நிகழ்த்துவதனையும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும், பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: திலீவின்பன்)

## ஜூலை மாதக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவு நாளை காலை 10.00மணிக்கு கல்லூரி வங் கியில் வழங்கப்படும் என யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

(து)

## விளையாட்டு விழா

மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்தவிளையாட்டுவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகமும் பங்குபற்றுவார்கள்.

(து-70)

# சுவாமி விவேகானந்தர்

## ஞானப் பட்டறையிலே

பகுத்தறிவைப் பிரதானமாக நரேந்திரர் எண்ணியது இந்தக் காலத்தவர்களின் கண்களைத் திறக்கவேதான். எதனையும் சந்தேகிக்கும் இயல்பு கொண்ட நரேந்திரர் இந்தக் காலத்துக்கு ஒரு சின்



னம். அவரே எந்தக் காலத்துக்கும் பொதுவான சத்திய அனுபவத்தின் உறைவிடமான ஸ்ரீராமகிருஷ்ணரிடம் தஞ்சம் புகுந்தார். இன்றும் நாம் ஐயப்படும் நூறாயிரம் விஷயங்களைப் பற்றி நம்மைவிட மிகவும் தீவிரமாக ஐயம் கொண்டு, அந்த ஐயத்திலேயே வெந்து கொண்டிருந்தவர் நரேந்திரர். அப்படிப்பட்டவர் அறிவுக்கனலும் குளிர்ந்து இதயத்திலிருந்து அருட்புனலைப் பெருக்கினால் தான் உய்யும் வழிபெறலாம் என்று உணர்த்தினால்தானே உள்ளுணர்ச்சியின் சத்தியத்துவம் நிதரிசனமாகும்? நம்பிக்கையின் மீதே அவர் ஸ்ரீராமகிருஷ்ணரையும், அவர் உருவகித்த தத்துவங்களையும் ஏற்றிருந்தால், சந்தேக மயமான நமக்கு எப்படி அந்தத் தத்துவங்களில் பிடிப்பு ஏற்படும்? நமக்காகவே தான் ஆண்டவன் நரேந்திரந்திரரை அனுப்பிவைத்து அவருடைய உள்ளத்தில் பெரும் போராட்டங்களை நிகழ்த்தினான். மனித குலத்துக்காக தம்முடைய உள்ளத்தில் எத்தனையோ குமுறல்களைத் தாங்கிய நரேந்திரரின் மாபெரும் கருணைக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

நரேந்திரரின் ஐயம் எப்படித் தீர்ந்தது? கடவுள் உண்டு என்று அவர் எப்படி நம்பினார்? கடவுளைக் காண முடியும் என்று அவர் எப்படி உணர்ந்தார்? கடவுள் பலப் பல தேவ தேவியராகத் தரிசனம் தரமுடியும் என்பதை அவர் எப்படி ஒப்புக்கொண்டார்? பகுத்தறிவுக்கு ஓர் எல்லை உண்டு என்பதை அவர் எப்படி அறிந்தார்? உள்ளுணர்ச்சியின் பெருமையை அவர் எப்படித் தெரிந்து கொண்டார்? அனுபவத்தின் சத்தியத்துவத்தை அவர் ஏற்றுக்கொண்டது எப்படி?

இந்த வினாக்களுக்கெல்லாம் யார் விடை சொல்ல முடியும்? பகவான் ஸ்ரீராம கிருஷ்ணருக்குத் தெரிந்திருக்கலாம்? ஒருக்கால் விவேகானந்தருக்கும் தெரிந்திருக்கலாம் என்று சுவாமிஜியின் சரிதத்தை எழுதிய ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டுப்புழு வண்ணத்துப்பூச்சியாக உருமாறுவது போல நரேந்திரர் விவேகானந்தரானார் என்று சுவாமி நிகிலானந்தர் அவர்கள் தாம் எழுதியுள்ள சுவாமிஜியின் சரிதத்தில் அழகுறக் கூறியிருக்கிறார். கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாவது எளிதில் நடைபெறும் காரியமல்லவே! நரேந்திரர் நரேந்திரராகவே தான் பல நாட்கள் இருந்துவந்தார்!

மெய்ப்பொருளும், ஜீவனும் ஒன்றே என்ற சமாதி நிலைக்குப் பரமஹம்சர் அவரை உயர்த்திச் சென்ற போது கூட அவருக்கு அது புரியத்தான் இல்லை, 'எனக்கு வீடு-வாசல், தந்தை-தாய் எல்லாம் இருக்கிறதே' என்று அலறித் தாம் நரேந்திரராகவே இருக்கத்தான் அவர் விரும்பினர். இதைப்பற்றி குருமகராஜ் ஒருமுறை வேடிக்கையாகக் கூறினார்.

செத்துப் போனபின் ஒரு வன் பிசாசாகப் போனான். அந்தப் பிசாசுக்கு ஒரு தோழன் வேண்டியிருந்தது. யாரேனும் இறந்துபோனதாக அறிந்தால் உடனே அந்த இடத்துக்குச் சென்றுவிடும் பிசாசு. ஆனால் இறந்துபோனவரின் ஆவி பிசாசுடன் கூட்டுச் சேராது. நான் நல்ல காரியங்கள் பண்ணிய வனாயிற்றே. அதனால் நான் பிசாசாக அலைய முடியாது என்று சொல்லி மரணமடைந்த மற்ற ஆவிகள் மேலுகம் சென்றுவிடும். அந்தப் பிசாசைப் போலவேதான் நானும் ஒரு சகாவுக்காக ஏங்கினேன். நரேன் உன்னைக் கண்டவுடன் அந்த சகாவைப் பெற்றுவிட்டோம் என்று எண்ணினேன். ஆனால் நீயும் வீடு-வாசல் இருக்கிறது, அப்பா-அம்மா இருக்கிறார்கள் என்றுதான் சொல்லிவிட்டாய்! கதையில் வருகிற பிசாசு போல நானும் தனித்தேதான் வாழுகிறேன்.

பிசாசுக்கும் பரமஹம்சருக்கும் எவ்வளவு தொலைவோ அவ்வளவு தொலைவு மற்றவர்களுக்கும் நரேந்திரருக்கும் என்பதுபோகப் போகத் தெளிவாயிற்று. தன்னுடைய வீடு-

## அத்தியாயம் -16

வாசல், தந்தை-தாய்-தமர் யாவும் குருதேவரே என்று நரேந்திரர் உணரும் காலமும் வரத்தான் போகிறது! வரவே செய்தது.

பரமஹம்சர் விளையாட்டாக இவ்வாறு கூறியபோதிலும் நரேந்திரருக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு தொலைவு என்பதை முதற் பார்வையிலிருந்தே அவர் நன்கு அறிந்துதான் இருந்தார். நரேந்திரரையும் இன்னும் சிலரையும் நித்திய சித்தர்கள்-பிறப்பிலிருந்தே பூரணத்துவம் பெற்றவர்கள்-என்பதாக அவர் கூறிவந்தார். 'அவர்கள் பெறும் பயிற்சிகளெல்லாம் அவர்களுக்காக அல்ல உலகத்தின் நன்மைக்காகவே அவை' என்று அவர் சொல்லுவார்.

சிற்பி தான் சிலை சமைக்கப் போகும் கல்லின் தன்மையை அதன் அந்தரங்கமான திட்டம் உள்பட எப்படி அறிந்திருப்பானோ அதுபோல ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் விவேகாந்தராகச் சமைக்கவிருக்கும் நரேந்திரரின் இதயக் கருவறையை எடுத்த எடுப்பிலேயே அறிந்திருந்தார். புதிர்க்கதிர் (X-RAY) படமெடுத்து, நோயாளியின் உடலிலுள்ள மர்மங்களை அறிந்த பின்பே வைத்தியர் சிகிச்சை தொடங்குகிறார். புதிர்க்கதிர் என்று நாம் கூறுவதை விடப் புதிரான ஞானத்திருஷ்டியால் நரேந்திரனின் அகத்திலுள்ள மர்மங்களை அறிந்தே அவரைத் தமது தனிப்பெரும் சீடரெனக் கண்டார் பரமஹம்சர்.

அந்த மர்மங்கள் அவருக்கு என்ன தெரிவித்தன? நரேந்திரர் ஸப்த ரிஷிகளில் ஒருவர். நர நாராயணரில் நரர், சிவத்தின் சாயல் அவர் என்றெல்லாம் தெரிவித்தன. இவற்றைப் பரமஹம்சர் வெளிப்படையாகத் தெரிவிக்கவும் தயங்கவில்லை.

நரேந்திரரைக் கண்டித்து யாரேனும் ஏதேனும் கூறினால் அதனை சிவநிந்தை என்பார் ஸ்ரீராம கிருஷ்ணர் நரேந்திரனை யாராலுமே எடைபோட முடியாது; அவனை முற்றிலும் அறிவது யாருக்குமே இயலாத காரியம் என்பார். நரேந்திரரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்களுக்காகவும், அதனைப்படிப்பவர்களுக்காகவுமே அவர் இவ்வாறு கூறினாரோ என்று தோன்றுகிறது.

தகாத நடத்தையுள்ள சிலருடன் நரேந்திரர் பழகுவதாக ஒரு பக்தர் பரமஹம்சரிடம் தெரிவித்தார். அவ்வளவுதான்! சினம் அறியாத முனிவரும் சினம் கொண்டார்: இது முழுப்பொய். நரேன் தீய வழியில் செல்லமுடியாது என்று சர்வேசுவரி என்னிடம் சொல்லியிருக்கிறாள். நீ இதுபோல இனியொருமுறை பேசினாயானால் உன் முகத்திலேயே நான் விழிக்கமாட்டேன் என்றார்.

நரேந்திரனின் முன்னிலையிலேயே அவரைப் பாராட்டவும் ஸ்ரீராமகிருஷ்ணர் தயங்கவில்லை. இவ்வாறு செய்வதால் பலவீன மனதுள்ளவர்கள் செருக்குறுவார்கள்; ஆனால் நரேந்திரரை அது தொடாது என்றே அவர் கருதினார். ஒரு நாள் பிரம்ம சமாஜத்தின் பெருந்தலைவரான கேசவ சந்திர சேனரும், விஜயகிருஷ்ண கோஸவாமியும் பரமஹம்சரைத் தரிசிக்க வந்திருந்தனர். அப்போது நரேந்திரநாதரும் அங்கிருந்தார். உன்னதமான ஒரு நிலையிலிருந்து? குருதேவர் அவ்விருவரையும் நோக்கினார்; நநேரந்திரரையும் நோக்கினார். உடனே நரேந்திரரின் எதிர்காலம் பெரும் சாதனை அவர் அகக்கண்ணில் பளிச்சிட்டது. பிரம்ம சமாஜத் தலைவர்கள் சென்ற பின் அவர் கூறினார்; நல்லது கேசவர் புகழ் பெற்று விளங்குவதற்குக் காரணம் அவர் ஓர் அம்சம்குண நலன்களைப் பெற்றிருப்பது என்றால், நரேனிடம் அதுபோலப் பதினெட்டு அம்சங்கள் உள்ளன. கேசவரிடத்திலும், விஜயரிடத்திலும் ஞானப் பிரகாசம் ஒரு மெழுகுவர்த்தீ அளவில் ஒளிர்வதாகக் கண்டேன். நரேனிடமோ அது தகிக்கும் சூரியனாக ஒளிவீசுகிறது. அஞ்ஞானம், மாயை இவற்றின் கடைசிச்சாயை வரை பரவி அவற்றை அழிக்கிறது அந்த ஒளி.

இவ்வாறு பரமஹம்சர் கூறியவுடன் நரேந்திரருக்குக் கர்வம் தலைக்கேறவில்லை. மாறாகக் கோபமே வந்தது. ஐயா, நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களை மக்கள் பைத்தியம் என்று எண்ணிக் கொள்வார்கள். உலகப் புகழ்படைத்த கேசவர் எங்கே, ரிஷிகளைப்போன்ற விஜயர் எங்கே, ஒரு முக்கியத்துவமும் இல்லாத மாணாக்கனாகிய நான் எங்கே! என்னை அவர்களோடு நீங்கள் எப்படி ஒப்பிடலாம்? தயவுசெய்து இனி இது போலச்செய்யாதீர்கள் என்று ஸ்ரீராமகிருஷ்ணரைக் கடிந்து கொண்டார் நரேந்திரர். ஆம் தமது அந்தரங்க சுத்தம் காரணமாகவே அவர் பல முறை சர்வ சகஜமாகக் குருவைக் கடிந்துகொண்டதுண்டு.

உடனே ஸ்ரீ பகவான் கூறினார் 'நரேன் என்னால் அப்படிச் சொல்லாமல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை அவை என்னுடைய வார்த்தைகள் என்றா நீ எண்ணுகிறாய்? அன்னை காளி எனக்குச் சில விஷயங்களைக் காட்டி அருளுகிறாள் அதையே நான் திருப்பிக் கூறுகிறேன். அவள் சத்தியம் தவிர வேறெதையும் எனக்குக் காட்டியதில்லை.'

அம்பிகை சொன்னாள் என்று அவர் கூறுவதை நரேந்திரரால் ஏற்க முடியவில்லை. உடனே அவர் சற்றும் கள்ளமில்லாமல், அம்பிகை தான் சொன்னாளோ, உங்கள் மனதின் கற்பனைதானோ? யார் கண்டது? உங்கள் நிலையில் நான் இருந்தால் இதெல்லாம் கலப்படமற்ற, அப்பட்டமான கற்பனையே என்றுதான் எண்ணுவேன், மேல் நாட்டு விஞ்ஞானமும் தத்துவ

ஆன்மீகப் பாதை
ரா.கணபதி

சாஸ்திரங்களும் என்ன சொல்கின்றன தெரியுமா? நம்முடைய உணர்வுகளே நம்மை ஏமாற்றி விடுகின்றன: அதுவும் ஏதேனும் ஒரு வஸ்துவிடம் மனச் சார்பு இருந்தால் கேட்கவே வேண்டாம் என்று அவை நிரூபித்திருக்கின்றன. உங்களுக்கு என்மேல் பேர் அன்பு இருக்கிறது. என்னை மிகப்பெரியவனாகக் காண நீங்கள் விரும்புகிறீர்கள். அதனால் உங்கள் மனது இப்படிப்பட்ட கற்பனைகளைப் பினைந்து காண்கிறது என்றார்.

நரேந்திரர் இவ்வாறு பலமுறை கூறியதுண்டு. பரம ஹம்சரின் மன நிலை மேலேமேலே சென்றுகொண்டிருக்கும் சமயங்களில் அவர் இந்தப் பேச்சை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார். மற்றச் சமயங்களில் அவருக்கு நிலை குலைந்துவிடும். பச்சைக் குழந்தை போலப் பயப்படுவார். எந்த அம்பிகையைப் பற்றிய ஐயத்தை நரேந்திரர் கிளப்பிவிட்டாரோ அதே அம்பிகையிடம் குழந்தயாக செல்வார் குழம்பிய பரமஹம்சர்.

(தொடரும்)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு மாகாணத்திலுள்ள பயிற்றப்படாத ஆங்கில ஆசிரியர்களுக்கு 'நெக்கோட்' உதவியுடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை தொடர் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளது.

த்ற்போது பிரதி சனிக்கிழமைகளில் இப்பயிற்சி வகுப்புக்கள் வடக்கு-கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் 30 பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்டுவருகின்றது. 'நெக்கோட்' அமைப்பு இப்பாரிய வேலைத்திட்டத்திற்கு ஒரு கோடி 75 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதற்குப் பொறுப்பாக த.மகாசிவம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கிலுள்ள 24 கல்வி வலயங்களிலும் மேலதிகமாக, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, தென்மராட்சி, பட்டியிருப்பு, வலிகாமம், வவுனியா தெற்கு ஆகிய இடங்களிலுமாக இம் 30 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிலையத்திலும் 35 ஆங்கில ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர். அண்மையில் நியமனம்பெற்ற 201 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மொத்தமாக 1050 பயிற்றப் படாத ஆங்கில ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 30 பயிற்சி வகுப்புகள் டிசம்பருக்குள் நடத்தி முடிக்கப்படவேண்டுமாதலால் ஆகஸ்ட் விடுமுறை காலத்திலும் 10 நாட்கள் தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளதெனவும் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (து-7)

## தேசிய கற்பித்தலில் டிப்ளோமா பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் 2000ஆம் 2001 ஆம் ஆண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்ட் ஆசிரியர்களுக்கான பட்ட மளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மேற்படி ஆசிரியர்கள் தங்கள் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளவும் உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்காக இணைப்பாளர் திரு.எம்.பிரபாகரனுடன் தொடர்புகொள்ளவும்.

இவ்வாசிரியர்களின் பதிவுக்கான விண்ணப்பக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடிதம் கிடைக்காத மேற் குறிப்பிட்ட ஆசிரியர்களும் இணைப்பாளருடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொள்ளலாம் என யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார். (து)



யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்களது வீதி மறிப்புப் போராட்டத்தால் கே.கே.எஸ்.வீதியில் அம்புலன்ஸ் வண்டி மற்றும் இ.போ.ச.பஸ்வண்டி வழிமறிக்கப்பட்டதையும், கஸ்தூரியார் வீதியில் முட்கம்பி வீதித்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், வெறிச்சோடிய நிலையில் காணப்படும் யாழ்.இந்துக்கல்லூரியையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தீலீவின்பன்)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 30 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - II நேரம்: 1 மணி 15 நிமிடம்

**கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 1-10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலையிலே விழித்தெழும்பும் காக்கையாரே
'கா' என்று கரைந்தெழும்பும் காக்கையாரே
மாலையிலே நீரைக் கண்டால் காக்கையாரே
மகிழ்ந்து குளித்திடுவீர் காக்கையாரே
ஊத்தைப் பொருளையுண்டு காக்கையாரே
உலகத்தைத் தூய்மை செய்வீர் காக்கையாரே
நேர்த்தியாகச் சோறிடுவேன் காக்கையாரே
நித்தம் வந்து தின்ன வேண்டும் காக்கையாரே

**பாடலிலே வருகின்ற காகத்தின் பண்புகள் இரண்டு எழுதுக.**

(1)........................................

(2)........................................

**இரண்டு கருத்துக்களில் வசனம் எழுதுக.**

(3)........................................

மாலை

(4)........................................

**ஒத்தசொல் தருக.**

(5) நித்தம் ..............................

(6) காகம் ..............................

**எதிர்ச்சொல் தருக.**

(7) தூய்மை ..............................

(8) விழித்தல் ..............................


(9) காகம் அடை காக்கும் காலத்தை எப்படி அழைப்பர்

........................................

(10) சிறுவன் காகத்திடம் என்ன கேட்கிறான்

........................................

**ஒரு பாடசாலையில் தரம் I - தரம் V வரையான மாணவர்களின் விபரம் எண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.**




(11) பாடசாலையிலுள்ள மாணவர்களின் தொகை என்ன

........................................

(12) தரம் II இல் 47 ஆண்பிள்ளைகள் எனின் பெண் பிள்ளைகள் எத்தனை பேர்

........................................

(13) தரம் I ல் 37 ஆண் பிள்ளைகளும் தரம் III ல் 52 ஆண்பிள்ளைகளும் இருந்தால் அவ் வகுப்புக்களிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை என்ன

........................................

(14) தரம் V ல் 1/3 பங்கினர் பெண்கள் ஆயின் ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்

........................................

(15) தரம் I ல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

........................................

(16) IV ம் V-ம் தர மாணவர்கட்கு வழங்குவதற்கு 100g வீதம் எத்தனை kg பயறு தேவை


........................................

(17) பாடசாலையிலுள்ள மாணவர்களில் 82 பேர் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்துக்கள் எத்தனை பேர்

........................................

(18) தரம் I, II மாணவர்கட்கு இலவசமாக பால் வழங்கப்படுகின்றது. ஒருவருக்கு 125 ml வீதம் எவ்வளவு பால் தேவை

........................................




**சரண்யா A யிலிருந்து B யிற்கும் லாவண்யா Bயிலிருந்து Aயிற்கும் மணிக்கு 10 km வேகத்தில் புறப்பட்டனர். இருவரும் காலை 7.00 மணிக்குப் புறப்படத் தொடங்கினர்.**

(19) காலை 7.30 மணிக்கு சரண்யா எங்கே நிற்பாள்

........................................

(20) காலை 7.30 மணிக்கு லாவண்யா எங்கே நிற்பாள்

........................................

(21) இருவரும் எவ்விடத்திலே சந்திப்பார்கள்

........................................

(22) லாவண்யா எத்தனை மணிக்கு கோவிலுக்கு வருவாள்

........................................

(23) சரண்யா எத்தனை மணிக்கு B யிலுள்ள வைத்தியசாலையை அடைவாள்

........................................


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(24) இரவில் இரை தேடாத பறவை
(வௌவால், ஆந்தை, தூக்கணாங்குருவி)

(25) இலங்கைக்கு உரித்தான பிராணி
(மரஅணில், சிங்கம், புலி)

(26) கரையோர நகரம் அல்லாதது
(கொழும்பு, குருநாகல், காலி)

**கீழே தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து விடை தருக.**




**தரப்பட்டுள்ள சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| தொப்பி, நடையன், காளை, தலைப்பா, நுகம், தொடுகயிறு, நாணயக்கயிறு, வளைத்தடி. |
|---|

(27) உழவு மாட்டின் கழுத்தில் வைக்கப்பட்டுள்ளது ....................

(28) உழவன் தலையில் அணிந்திருப்பது ....................

(29) சூடடிப்பின் போது உழவு மாட்டின் பெயர் ....................

(30) மாட்டின் மூக்கில் கோர்க்கப்பட்ட கயிறு ....................

(31) உயரத்தில் இருக்கும் வானரத்தின் தலையில் A என அடையாளம் இடுக.

(32) படத்தில் ஒரு பிராணியை இறைச்சிக்காக வெட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அப்பிராணி எது ....................

(33) உழவு மாடுகள் செல்லும் திசை எது ....................

(34) குரங்கு தனது குட்டியை எவ்வாறு எடுத்துச் செல்லும்

........................................

(35) பூனை சீறும் பாம்பு ....................


**கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக.**

(36) வந்துரா.................... (37) உத்துற....................

**தரப்பட்டுள்ள படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**







(38) .................... (39) .................... (40) ....................

**வெள்ளைப் பூனை பசுப்பாலை விரும்பிக் குடிக்கும்**

**மேலுள்ள வசனத்திலுள்ள அடைமொழிகளை எழுதுக.**

| எழுவாய் அடைமொழி | பயனிலை அடைமொழி | செயப்படுபொருள் அடைமொழி |
|---|---|---|
| (41) .................... | (42) .................... | (43) .................... |

(6 ஆம் பக்கம் பார்க்க)

(.5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கோகுலனின் நாட்குறிப்பேட்டில் காணப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| Hospital | 326941 |
| Airport | 222734 |
| Post Office | 659427 |
| School | 373020 |
| Office | 381127 |

**அட்டவணையைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையை எழுதுக.**

(44) 659427 தொலைபேசி இலக்கத்துடன் எங்கே தொடர்பு கொள்ளலாம்

..............................................................................

(45) வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கம் என்ன

..............................................................................


(46) பத்தாம் திகதியன்று லண்டனில் இருந்து விமானம் பற்றிய தகவல் களைப் பெறுவதற்கான தொலைபேசி இலக்கம் எது

..............................................................................

(47)பாடசாலை மூடப்படவுள்ள நேரம் சம்பந்தமான விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்

..............................................................................

**படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**




(48) முளைக்கும் வித்து எது


..............................................................................

(49) வித்து C க்கு என்ன நடைபெற்றது என எண்ணுகிறீர்

..............................................................................

(50) வித்து A முளைப்பதற்கு என்ன் செய்ய வேண்டும்

..............................................................................




(51) இணைப்பு A, C ஒளிருமா

..............................................................................

(52) இணைப்பு A, B ஒளிருமா

..............................................................................



(53) இவ்விணைப்பு ஒளிருமா

..............................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**



(54) இவ்விணைப்பு ஒளிரும் / ஒளிராது

(55) ஒளி சமம் / கூடிக்குறையும்

**56-60 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட நிகழ்வைத் தொடர்ந்து ஐந்து வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்கள் வரை இருத்தல் வேண்டும்.**

இரவு 9.00 மணியளவில் மின்சாரம் தடைப்பட்ட போது.........

(56)..............................................................................

(57)..............................................................................

(58)..............................................................................

(59)..............................................................................

(60)..............................................................................

## புலமைப் பரிசில் பரீட்சையில் மகிழ்வுடன் பங்குபற்றவுள்ள பிள்ளைகளே!

வலம்புரி இவ்வருடத்தில் 30 நாட்கள் பயிற்சி வினாக் களையும் விடைகளையும் தந்து உங்களுடன் கைகோர்த்துப் பங்காளியாகியுள்ளது. பரீட்சையில் உச்ச பயனைப் பெற வலம்புரியின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

அடுத்து வரும், வருடங்களிலும் எமது கல்விச் சேவை தொடரும்.

*பயிற்சி உயர்ச்சியைத் தரும்*

## ஆரம்பக் கல்வியின் எல்லையை நெருங்கும் உங்களுக்கும் உங்கள் இளையவர்கட்கும்....

பயிற்சி வினாக்களுக்கு மதிப்பளித்து உங்கள் கற்றலை உங்களின் ஆசிரியரின் வழிகாட்டலில் தொடருங்கள். பயன் பெறுங்கள்.

# அரச அதிபரின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் திணைக்களங்கள் சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு மேலதிகமாக தீர்மானங்கள் ஏதாவது இருப்பின் அவற்றை எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் அனுப்பிவைக்கு மாறு யாழ்.அரசாங்க அதிபர் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

(து-133)

## வினாத்தாள் – 28 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. தாவிக்குதித்து | 02. மழை, காற்று போன்றவை | |
| 03. பொருத்தமானது | 04. வாலில் | 05. மழைக்காலத்தில் |
| 06. 2 | 07. 3 | 08. 3 |
| 09. 3 | 10. கடும் வெயில் | 11. 105 |
| 12. A 35.00, B 15.00 | 13. 250 | 14. 200 |
| 15. 150 | 16.. திங்கட்கிழமை | 17. 950 |
| 18. 160 | 19. 98 | 20. 1927 |
| 21. வடமாகாணம் | 22. வீதியைக் குறிக்கின்றது | |
| 23. காட்டுக்கோழி | 24. கொக்கு | 25. ஆட்காட்டி |
| 26. மீன்கொத்தி | 27. றோசா | 28. அறுகம்புல் |
| 29. மழைக்காலம் பற்றி | 30. தென்னோலை | 31. ஒளி |
| 32. சிறுமழை | 33. பொருத்தமானவை | 34. மாரிகாலம் / மழைகாலம் |
| 35. இரா.செல்வகணபதி | 36. Mason | 37. Tailor |
| 38. Farmer | 39. 21 | 40. 3 |
| 41. 7 | 42. 6 | 43. 21 |
| 44. 2 | 45. அண்ணா சந்தைக்குச் சென்றார் | |
| 46. திராட்சை, தோடை, றம்புட்டான் கொண்டு வந்தார் | | |
| 47-50. பொருத்தமானவை | | 51. திறப்பான் |
| 52. பேணிகளை வெட்டல் | | 53. மூடி திறத்தல் |
| 54. அடைப்பான் திறத்தல் | | 55-60.பொருத்தமான வசனங்கள். |

## வினாத்தாள் – 29 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. 1, 2 | 02. 2, 3 | 03. 1 |
| 04. 1 | 05. 1 | 06. 2 |
| 07. 2 | 08. A | 09. C D |
| 10. B | 11. 27 ச.செ.மீ | 12. 1 |
| 13. 3 | 14. 4 | 15. 4 |
| 16. 3 | 17. 1 | 18. 2 |
| 19. முதல் எழுத்தை மாற்றி | | 20. விழாமல் |
| 21. 80.00 | 22. 69kg 950g | 23. 15 |
| 24-26. பொருத்தமானது | | 27. 2 |
| 28. 1 | 29. ஆண் | 30. புறா |
| 31, 3 | 32. பாண் தயாரிப்பவர் | 33. பொலிஸ் பரிசோதகர் |
| 34. தாதிய உத்தியோகத்தர் | | 35. மவுஸ் |
| 36. சீ டி | 37. கால் மிதி வைத்தல் | 38. சுவர்ப்பலகை |
| 39. 2 | 40. 3 | |




தொண்டர் ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக மூன்றாவது நாளாகவும் முடக்கப்பட்டுள்ள யாழ்.கல்வி வலயம்.

*(படம்: திலீவின்பன்)*

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொழிற்பயிற்சி

படித்த இளம் யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்ற மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மைக் காலத் தில் அறிமுகமான பற்றிக் பயிற்சி, நவீன ஆடை அமைத்தல் போன்ற பயிற்சிகளை யுவதிகளுக்கு வழங்கியுள்ளது.

அப்பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்கள் சுயமாக இவை சம்பந்தமான தொழில் களை ஆரம்பித்து பயனடைந்து வருகின் றனர்.

இதன் அடுத்த கட்டமாக பற்றிக், நவீன ஆடை அமைத்தல் பயிற்சிகளை மேலும் ஒரு பிரிவினருக்கு வழங்க மகளிர் அபி விருத்தி நிலையம் நடவடிக்கையெடுத் துள்ளது.


ஆர்வமுள்ள பெண்கள், மகளிர் அபி விருத்தி நிலையத்துடன் உடனடியாக 222 2454 எனும் தொலைபேசி இலக் கத்திற்கு தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேற்படி நிலையத் தின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள் ளார்.

(து)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 51

முருக-தனுஷ்கோடி



இப்படித் துவங்கிய காமராஜ் முழக்கம் இந்தியாவின் முதல் போரில் அதாவது சுதந்திரப் போரில் பெரும்பங்கு கொண்ட பல தியாக தளகர்த்தர்களின் அண்மைக்கால மரணத்திற்கும் இந்திய சீன எல்லைப் போரில் உயிர்நீத்த தியாக வீரர்களுக்கும் அஞ்சலி தெரிவித்துவிட்டு இந்திய மக்களின் வறுமை ஏற்றத்தாழ்வு ஆகியவுற்றைப் போக்க நாம் மேற்கொள்ளவிருக்கும் இரண்டாவது பொருளாதாரப் போரின் அவசியத்தையும் அவசரத்தையும் விளக்குவதாக அமைந்தது.

நமது பொருளாதார முன்னேற்ற நடைமுறையில் கவலைப்படவேண்டியதான சில அம்சங்களும் இருக்கின்றன. முதலாவதாகச் செல்வமும் பொருளாதார பலமும் சிலர் கையில் சேர்ந்துவிடுவதையே நான் குறிப்பிடுகிறேன் . இதன் பலனாகச் சில தொழில்களில் ஏகபோக ஆதிக்கம் சிலரிடம் இருக்கிறது. வரியை ஏய்ப்பது பற்றாக்குறை இருக்கும் பொருள்களில் கள்ளச் சந்தை, உணவுப் பொருட்களின் கலப்படம் செய்வது போன்ற அடாத செயல் களும் காணப்படுகின்றன. வர்த்தகத் தில் நேர்மை குன்றி வியாபார ஒழுங்கும் சீர்கேடடைந்து வருகிறது. இவ் விஷயத்தில் சரியான நட வடிக்கை எடுத்தாக வேண்டியது அவசியமாகிறது என்று கூறிய தலைவர் நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் விளக்கினார். சோஷலிசமே நம் இலட்சியமாக இருப்பதால் பெருளாதார பலம் சிலரிடம் குவிவதையும் இது வம்சவாரியர்கத் தொடர்ந்து வருவதையும் தடுத்தாக வேண்டும் .அப்படியின்றி இதைத் தங்கு தடை யில்லாமல் நடந்து கொண்டுபோக அனுமதித்துவிட்டால் நிச்சயமாக நம் முன்னேற்றத்திற்கு முட் டுக்கட்டையாகிவிடும். பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்குவதில்தான் இது போய் முடியும் என்று விவரித்தார் காமராஜ்.

இந் நாட்டின் சட்டதிட்டங்களும் நிர்வாக முறைகளும் மக்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டிருக்கும் சோஷலிச இலட்சியத்தை நிறைவேற்றிவைப்பவைகளாக இருக்கின்றனவா என்பதே இப்போது நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்று கூறி இந்த வகையில் ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வித முன்னேற்றம் நடந்திருக்கிறது என்பதை அகில இந்திய காங்கிரஸ் ஆராய வேண்டும் என்றும் வற்புறுத்தினார். ஏகபோகத் தொழில்கள் வளர்வதைத் தடுக்கவேண்டிய நடவடிக்கையைச் சீக்கிரத்தில் நம் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி இந் நாட்டில் ஏகபோகங்களாக இருக்கும் தொழில்க்ளின் நிலைமையை ஆராய வேண்டும் என்றார். புதிய பகுதிகளை அபிவிருத்தி செய்து புதிய தொழில்களை ஆரம்பித்தாக வேண்டும் என்ற காமராஜ் எல்லா மாநிலங்களுமே செகண்டரிக் கல்வி வரையில் இலவசக் கல்வி முறையைப் படிப்படியாக அமுலாக்க முயற்சி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

*நவ இந்தியாவை உருவாக்க*

காங்கிரஸ் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பிறகு அதற்கு உடன்பட்டு அதை ஏற்றுக்கொண்டு அதன் படி நடந்தாக வேண்டியது ஒவ்வொரு காங்கிரஸ்காரரின் புனிதமான கடமை .கொள்கை சம்பந்தமாக முடிவுக்கு வந்துவிட்ட பிறகு காங்கிரஸ்காரர்கள் வெவ்வேறு விதமாகப் பேசி வருவதும் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டிருப்பதும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. ஆகையால் நாம் ஒன்றுபட்டு தேசத்தின் அபிவிருத்தி இலட்சியத்தில் கட்டுப்பாட்டுடன் கடமை வீரர்களாக வேலை செய்ய வேண்டும்.

முன்பு மகாத்மா காந்தியின் தலைமயின் கீழ்ப் பணியாற்றும் பாக்கியம் நமக்கு இருந்தது. காந்தியின் வழிவந்தவர்கள் என்ற முறையில் காங்கிரஸ்காரர்கள் தாங்கள் மேற்கொண்ட சிறந்த இலட்சியத்தையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் கடைப்பிடித்தாக வேண்டும் . மற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களிடம் எதிர்பார்ப்பதைவிட உண்மையில் காங்கிரஸ்காரர்களிடத்தில்தான் உயர்வான நடத்தையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகையால் நமது அன்றாட நடத்தையில் காந்தீய வழியை மேற்கொள்ள வேண்டும் என்று எல்லோரையும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மகாத்மாவிடமிருந்த மகத்தான அருங்குணங்களில் முக்கியமாகப் பிரகாசித்தவை இரண்டு. அவை நடத்தையில் எளிமை; மனித வர்க்கத்திற்குச் சேவை என்பவையே. நாம் கனவு கண்டு வந்திருக்கும் நவ இந்தியாவை இந்த எளிதான இரு கருவிகளைக் கொண்டு நாம் அமைப்போமாக.

என்று தமது முழக்கத்தை முடித்தபோது புவனேஸ்வரத்தில் எழுப்பப்பட்ட கையொலியும் வாழ்த்துக்கோஷமும் பல மைல் தூரம்வரை கேட்டது. தலைவர் காமராஜ் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த போது அவருக்கு உதவியாய் செயலாளராய் இருந்து ஜி.ராஜகோபாலன் செயலாற்றினார். 6ஆம் திகதியன்று உடல் சுகவீனமடைந்த நேருஜி அதன் பிறகு கூட்டத்தில் கலந்துகொள்ள வில்லை. ஜனவரி 5ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதி இரவு 7 மணிவரை புவனேஸ்வர களம் இருந்தது. வீரர்களும் தளபதிகளும் போர் முழக்கமிட்டனர். 11ஆம் திகதி களம் மட்டும் இருந்தது. வீரர் கள் அனைவரும் வறுமைப் பகைமுடிக்க நாடெங்கும் பரந்து பிரிந்து சென்றனர்.

*புவனேஸ்வரின் சிறப்பு*

இந்திய நாடு, காங்கிரஸ் மகாசபை, சோஷலிச இயக்கம் ஆகிய மூன்றின் வரலாற்றிலும் ஒரு முக்கியமான திருப்பமாக அமைந்த புவனேஸ்வரம் காங்கிரஸில் எடுக்கப் பெற்ற முக்கியமான முடிவு இதுதான். சோஷலிச சமுதாய அமைப்பு இலட்சியத்தைப் பொதுவாக ஒப்புக்கொண்டிருந்தாலும் ஜன நாயக சோஷலிசமே காங்கிரஸின் இலட்சியம் என்று உறுதியாகத் தீர்மானித்து அதைக் காங்கிரஸ் கட்சியின் அமைப்பு விதிகளிலும் முதன் முதலாக சேர்த்துக் கொண்டது.

இதுதவிரக் குறிப்பிடத்தக்க அம்சங்கள் வருமாறு, நீண்ட காலத்திற்குப் பின்னர் ஒரு தமிழர் காமராஜ் இந்திய தேசிய காங்கிரஸின் தலைமைப் பீடத்தில் அமர்ந்தது. காங்கிரஸின் நீண்டகால வரலாற்றிலேயே இல்லாத புதுமையாக தலைவர் தமிழ் மொழியில் தமது தலைமைப் பிரசங்கத்தை ஆற்றியது. நேருஜிக்குப் பின்னர் காங்கிரஸிலுள்ள சகல தரப்பினராலும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவர் இந்திய தேசிய காங்கிரஸின் தலைமைப்பீடத்தில் அமர்ந்தது.நேருஜி இல்லாமலிருந்தும் சுமார் 400 உறுப்பினர்களுக்கு மேல் எப்போதும் சபையில் அமர்ந்திருந்தது கவனத்தோடும் பொறுப்புடனும் விவாதத்தில் கலந்துகொண்டது ஆகியவையேயாகும்.

## சமதர்ம யாத்திரை

அகில இந்திய காங்கிரஸ் தலைவரானதும் நாடெங்கும் அவர் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார் காலாகாந்தி (கருப்பு காந்தி) என்ற மக்கள் அவரை அழைத்து ஜே போட்டனர். பஞ்சாப் நேபாள எல்லை ஒரிசா, உத்திரப் பிரதேசம் , ஆந்திரா, மைசூர் எனப் பரபரப்பான பயணத்திட்டங்களை நெருக்கடிக்கு மத்தியிலும் மேற்கொண்டார் . 1956 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம்நாள் சுற்றுப் பயணத்தைத் தமிழகத்தில் மேற்கொண்டார் .அந்தச் சுற்றுப்பயணம் சமதர்ம யாத்திரை என்று தமிழக மக்களால் அழைக்கப்பட்டது.

(தொடரும்)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச சபை வளாகத்தில் நெல்லியடி பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி பயன்தரு மரமொன்றை நாட்டுவதையும், அருகே ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- துன்னாலை நிருபர்)



இராஜ்யோகினி பிரம்மகுமாரி மீசா அவர்களால் யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் புதிய பிரதான நிலையம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## சிவதாசனின் உடல் நிலையில் முன்னேற்றம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்த ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எஸ் .சிவதாசனின் உடல் நிலை தேறிவருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசரசிகிச்சை பணிப்பாளர் டாக்டர் அமல் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் படு காயமடைந்த பெண் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார். 5 பேர் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எஸ். சிவதாசனின் உடல் நிலைக்கு பெரும் பாதிப்பு இல்லை என்று டாக்டர் ஜெயசிங்க மேலும் தெரிவித்தார். (து-9)

## வாகனங்கள் நிறுத்தத் தடை

(கொழும்பு)

பாதுகாப்பு காரணங்களுக்காக கொள்ளுப்பிட்டியிலிருந்து காலி வீதி மற்றும் டுப்ளிக்கேஷன் வீதிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கு தடை விதிக்க தீர் மானிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் அந்தப் பிரதேசங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கொழும்பு மோட்டார் வாகனப் பொலிஸார் மக்களிடம் கேட்டுக் கொள்கின்றனர்.

வாகனங்களை நிறுத்த மாற்றிடங்கள் பல தெரிவு செய்யப்ப ட்டுள்ளன. (து-9)

## வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களை வெளியேற்ற புலிகள் முயற்சி என்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்ற விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பேசிய போதே அவர் இதைத் தெரிவித்தார்.

முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் தங்களுக்கான ஒரு தலைமையை உருவாக்க வேண்டும் என்றும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் உறுப்பினர்கள் , இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம்கள் மீளக் குடியேற மஹிந்த மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மஹிந்த ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் தரப்பின் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். (து)

### அக்ஸன்பா நிறுவனப் பணி இலங்கையில் நிறுத்தம்

இலங்கையில் தமது பணி களை நிறுத்தியுள்ளதாக பிரான்ஸை தலைநகரமாகக் கொண்ட அக்ஸன்பா நிறுவனம் அறிவித்துள்ளது.

மூதூரில் சில நாட்களுக்கு முன்னர் தமது பணியாளர்கள் 15 பேர் கொல்லப்பட்டமையை அடுத்தே இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரான்ஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தலைமையகத்தின் மனிதவலுப் பணிப்பாளர் நிலைமையை அவதானிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். (து-9)

# பக்ரைனில் சாப்பாட்டுக்கு திண்டாடும் 150 தமிழர்கள்

பக்ரைன் நாட்டில் செயல்பட்டு வந்த ராயல்டவர் கன்ஷ்ட்ரக்சர் என்ற கட்டுமான நிறுவனத்தில் ஏராளமான தமிழர்கள் பணியாற்றிவந்தனர். அவர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் கடந்த 30ஆம் திகதி தீவிபத்து ஏற்பட்டது. இதில் 17 தமிழர்கள் பலியானார்கள். 9 பேர் காயம் அடைந்தனர். இறந்தவர்கள் உடல் சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டன.



இறந்தவர்களுக்கு அந்த நிறுவனத்திடம் இருந்து நஷ்டஈடு பெற்று கொடுக்க இந்திய பிரதமரகத்திற்கும் பக்ரைன் அரசும் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. இந்த நிலையில் அந்த நிறுவனம் தனது கட்டுமான பணிகளை நிறுத்திவிட்டது. இதனால் அனைத்து தமிழர் களையும் வேலையில் இருந்து நீக்கி விட்டது. இப்போது 150 தமிழர்கள் வேலை இல்லாமல் தவிக்கின்றனர். அவர்கள் அனைவரும் தற்காலிக கூடாரங்களில் தங் கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை வேறு வேலைகள் எதிலும் சேர வேண்டாம் இது சட்டப்படி குற்றம் என்று இந்திய பிரதம அதிகாரி கூறி இருக்கின்றனர் இதனால் அவர்களால் வேறு வேலைக்கு செல்ல முடியவில்லை சாப்பாட் டுக்கே பணம் இல்லாமல் திண்டாடு கிறார்கள்.

இது பற்றி ராமச்சந்திரன் கருப்பன் என்ற தொழிலாளி கூறும்போது இந்திய பிரதமரகம் வேறு வேலைக்கு செல்லக்கூடாது என்று சொல்லி விட்டதால் வேறு வேலைக்கு போக முடியவில்லை. எங்களிடம் பணம் இல்லை. சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தவிக்கிறோம் இதே சூழ் நிலை நீடித்தால் எங்களால் இங்கு வாழ முடியாது என்றார்.

இந்திய பிரதம அதிகாரி ஏ.கே.பட் நாகர் கூறும்போது இந்திய தொழிலாளர் களுக்குரிய நிவாரணம் கிடைக்க பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. விரைவில் நல்ல தீர்வு காணப்படும் என்றார். (கு)



ஆஸ்திரேலிய நகரான சிட்னியில் உள்ள மிருககாட்சி சாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய கழுகு பறப்பதை அதனை பராமரிக்கும் பெண் பார்க்கிறார்

# இஸ்ரேல் போர்விமானங்கள் தாக்குதல் ஐந்து குழந்தைகள் உட்பட 9 பேர் பலி

இஸ்ரேல் போர் விமானங்கள் லெப்னான் மீது நேற்று நடத்திய தாக்குதலில் ஐந்து குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர். இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களுக்கு பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டிவிட்டது. ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை வேட்டையாடுவதாகக் கூறி, இஸ்ரேல் போர் விமான்ங்களும், இராணுவத்தினரும் லெபனான் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. லெபனானின் தலைநகர் பெய்ரூட் மீது நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கும் அதிகமான முறை, இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் நான்கு மாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததால் ஐந்து குழந்தைகள் ஒரு பெண் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் நான்கு ராக்கெட் லாஞ்சர்கள் அழிக்கப்பட்டதாகஇஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே தெற்கு லெபனான் பகுதியில் பாலஸ்தீன அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் காயமடைந்தனர். லெபனானின் உள்ள அகதிகள் முகாம்களில் இதுவே மிகப்பெரியது. ஐம்பதாயிரம் பேர் இந்த முகாமில் தங்கியுள்ளனர். கட்டட இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தவர்கள் மூன்று வெவ்வேறு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தினர் தொடர் தாக்குதலால் லெபனானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# மன்மோகன் சிங் மீது நட்வர்சிங் பாய்ச்சல் தேர்தலை சந்திக்காத பிரதமர் எனக் கிண்டல்

காங்கிரஸ் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட நட்வர்சிங் கடும் கோபத்தில் இருக்கிறார். சஸ்பெண்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது முதல் அவரிடம் இருந்து அனல் பறக்கும் வார்த்தைகள் தான் வெளியாகி வருகின்றன. மன்மோகன்சிங் பலவீனமாக பிரதமர் தேர்தலை சந்திக்காதவர் என்றெல்லாம் நட்வர்சிங் வசைபாடியுள்ளார். பத்திரிகைகளுக்கும் தனியார் டி.வி களுக்கும் நட்வர்சிங் நேற்று முன்தினம் இரவு முதல் பேட்டி அளித்து வருகிறார்.

என்னுடைய கருத்தை கேட்காமலேயே கட்சியில் இருந்து என்னை நீக்கிவிட்டனர். நான் காயப்படுத்தப்பட்டுவிட்டேன். தற்போதுள்ள மன்மோகன் சிங்கையும் சேர்த்து இதுவரை 11பேர் பிரதமர்களாக இருந்துள்ளனர். இவர்களில் 10பேர் மக்களை சந்தித்து தேர்தலில் போட்டியிட்டு லோக்சபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அதன்பிறகே பிரதமர் பதவிக்கு வந்தவர்கள். ஆனால் பிரதமர் மன்மோகன்சிங் தனது வாழ்நாளில் இதுவரை ஒரு முனிசிபாலிட்டி தேர்தலில் கூட நின்றது இல்லை.

மன்மோகன்சிங் நியமன்ம் செய்யப்பட்ட பிரதமர். இந்திய மக்களின் பிரதிநிதியாக அவர் இல்லை. கட்சிக்கு நான் களங்கம் ஏற்படுத்தி விட்டதாக இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகிறார். பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசில் அமைச்சர்களாக இருக்கும் மூன்று பேர் மீது கொலை மற்றும் கற்பழிப்பு புகார்கள் உள்ளன. இதற்கு அவர் என்ன பதில் சொல்ல போகிறார். அந்த மூன்று அமைச்சர்களால் அரசுக்கு களங்கம் ஏற்படவில்லையா?

பிரதமர் மன்மோகன் சிங் அலுவலகத்தில் இருந்து பதக் கமிட்டி அறிக்கை கசிய விடப்பட்டதுமிகவும்நல்லவிஷயமா? என்னை பொறுத்தவரை மன்மோகன் சிங் ஒரு பலவீன மான பிரதமர். தனது சக அமைச்சர்களுக்கு உறுதுணையாக அவர் எப்போதும் நின்றது இல்லை. மன்மோகன் சிங்குடன் நான் 40 ஆண்டுகள் பணியாற்றி யுள்ளேன். வெளியுறவு விவகாரங்கள் குறித்து அவருக்கு எதுவுமே தெரியாது. பல முறை நான் தான் சொல்லி கொடுத்துள்ளேன். எனக்கு பிரச்சினை ஏற்பட்ட போது எனக்கு ஆதரவாக கருத்தை வெளியிட தைரியம் இல்லாதவர் மன்மோகன்சிங்.

நீதிபதி பதக்குக்கு உதவி செய்ய வக்கீல்கள் தேர்வு செய்யப்பட்டனர். என்மீது விரோதம் உள்ளவர்களாக பார்த்து அந்த இரண்டு அமைச்சர்களும் வக்கீல்களாக நியமன்ம் செய்தனர். ஈராக் எண்ணெய் அமைச்சருக்கு நான் எழுதிய மூன்று கடிதங்களை தான் முக்கிய ஆதாரங்களாக பதக்கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த மூன்று கடிதங்களிலும் உள்ள கையெடுத்து மட்டுமே என்னுடையது. ஆனால் அந்த கடிதங்களில் இடம்பெற்றுள்ள விடயங்கள் என்னுடையது அல்ல. ஒட்டு வேலை செய்துள்ளனர்.

கடந்த காலத்தில் சர்வதேச கோர்ட்டில் நீதிபதி பதவியை வாங்கி தரக்கேட்டு என் கழுத்தை பிடித்துகொண்டு தொங்கி கொண்டு இருந்தவர் தான் இந்தநீதிபதிபதக். அவர்தான்என் மீது குற்றச்சாட்களை கூறியுள்ளார். ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகியோர் மீது நான் பெரும் மதிப்பு வைத்து இருப்பவன். என்வே காங்கிரஸ் தல்லவர் சோனியாவை பற்றி ஒருவார்த்தை கூட கூறமாட்னே. இவ்வாறு நட்வர் சிங்கூறினார். (கு)



சிங்கப்பூரின் 41 வது சுதந்திர தினத்தை அந்நாட்டு மக்கள் வாண வேடிக்கையுடன் வெகு சிறப்பாக கொண்டாடினார்கள்

# தாயையும் மகனையும் தூக்கிலிட்டு கொன்ற தலிபான்கள்

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் வயதான ஒரு பெண்மணியையும் அவரது மகனையும் மரத்தில் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் கூடாரமாக இருப்பது ஹெல்மண்ட் மாகாணம் அந்த மாகாணத்தில் உள்ளது டெய்க் கிராமம். அங்குவசித்து வந்த 70 வயதான ஒரு பெண்மணியும் அவரது 30 வயது மகனும் அரசுக்கு உளவு சொன்னதாக தலிபான் தீவிரவாதிகள் சந்தேகித்தனர். அதனால் கடந்த திங்கட்கிழமை அவர்கள் இருவரையும் மரத்தில் தூக்கிலிட்டு கொன்றனர். அதன் பிறகு அந்த தீவிரவாதிகள் அர சுக்கு யாரலாவது உளவு சொன்னால் அவர் களுக்கும் இதேகதி என்று அந்த கிராமமக்களை மிரட்டி விட்டுச்சென்றனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்மனியின் மருமகன் பொலிஸ் துறையில் பணி புரிவதாக அந்த மாகாணத்தின் துணை கவர்னர் அமிர் முகமது அக்குசாதா தெரிவித்தார். (கு)

# ஆயுதங்களை கையாள்வது தொடர்பாக நேபாள அரசு - மாவோயிஸ்டுகள் ஒப்பந்தம்

நேபாளத்தில் ஆயுதங்களை கையாள்வது தொடர்பாக அரசுக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா மற்றும் மாவோயிஸ்ட் தலைவர் பிரசாந்தா ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிற்குப் பின்னர் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதன் பின்னர் இரு தரப்பினரும் கூறுகையில், ஆயுதங்களை கையாள்வது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை நாங்கள் தீர்த்துக்கொண்டுள்ளோம். இதன் மூலம் இடைக் கால அரசில் மாவோயிஸ்ட்கள் இடம் பெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்றனர். (கு)

# நடுவானில் விமானத்தை தகர்க்க திட்டம் 15 தீவிரவாதிகள் கைது

அமெரிக்காவில் 4 விமானங்களை தீவிரவாதிகள் கடத்தி முக்கிய இடங்களை தகர்த்தது போல இங்கிலாந்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற தீவிரவாதிகள் முயற்சித்ததை லண்டன் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். கைப்பையில்வெடிமருந்துகளைகொண்டு சென்று விமானம் நடுவானில் பறக்கும் போது வெடிக்க செய்வது என்று இவர்கள் திட்டமிட்டு இருந்தனர். இது தொடர்பான 15 தீவிரவாதிகளை பொலிஸார் கைதுசெய்தனர். (கு)

ஆபத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். ஆபத்தைச் சமாளிக்க வழி என்ன என்று முடிவு கண்டு நிவாத்திக்க முயற்சி செய்யுங்கள்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## சண்டையா? சமாதானமா? இரண்டும் கெட்ட நிலையில் நாடு

சண்டையும் இல்லை. சமாதானமும் இல்லை. இந்த இரண்டும் கெட்ட சூழ்நிலையில் வாழ்வதென்பது மிகவும் கடினமான காரியமே.

இலங்கையில் இருக்கக் கூடிய பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. அதில் ஒன்று சண்டை. மற்றையது சமாதானம்.

இதில் சண்டையா? சமாதானமா? என்பதை தீர்மானிப்பது யார் என்பதே இப்போதுள்ள பிரச்சினை. மக்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கு ஓர் முடிபு கிடைத்தாக வேண்டும்.

அதிலும் அந்த முடிபு மிக விரைவாகக் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். முடிபு கிடைத்தாக வேண்டும் என மக்கள் விரும்புவார்களாயின் அது எந்த வழி என்ற அடுத்த கேள்வி எழுகின்றது.

அங்குதான் பொதுமக்களின் பொறுப்புடன் கூடிய பதிலை காணமுடியும். அதாவது கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் சண்டை நடைபெற்று வந்துள்ளது.

அதேபோல் சமாதான முன்னெடுப்புக்களும் இடையிடையே இடம்பெற்றுள்ளன. இதில் சமாதான வழியில் தீர்வுத் திட்டத்தை அடைவதற்காக பல்வேறு பாதைகள், வழிமுறைகள் ஊடாக பயணித்த போதிலும் குறித்த இலக்கை யாராலும் அடைய முடியாது போயுள்ளது.

அதேநேரம் சமாதான காலத்திலும் மனித உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருப்பது கண்கூடு. இந்நிலையிலேயே மக்கள் வெறுப்படைந்து சண்டையாயின் சரி சமாதான வழியாயினும் சரி ஏதோவொரு முடிந்த முடிபை கண்டாக வேண்டும் என்ற இறுக்கமான நிலைக்கு வந்துவிட்டனர்.

இதில் சண்டை மூலமாக பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்படக் கூடிய அழிவுகள் ஏராளம் என்பது தெரிந்த விடயமே.

ஆயினும், சமாதான சூழ்நிலையில் இடம்பெறும் மனித உயிரிழப்புக்களை விட சண்டை மூலம் மனித உயிர்கள் இழக்கப்படுவதை மக்கள் சகித்துக் கொள்ளத் தயாராகவிருக்கின்றனர்.

எனவே மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டின் தற்போது நடைமுறையில் இருக்கக் கூடிய சூழ்நிலையில் வாழத் தயாரில்லை.

இது சண்டையும் சமாதானமும் அற்ற சூனியச் சூழல்-இச் சூழலில் வாழ்வது பாதுகாப்பானதா? பாதுகாப்பற்றதா? என்பதைக் கூடத் தீர்மானிக்க முடியாத நிலையில் நிம்மதியாக வாழ்வது எப்படி?

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு எந்தவழியிலாயினும் கிடைத்தாக வேண்டியது பொதுமக்களின் தற்போதைய நிலை.

## பிறேமதாஸா பற்றி அவமானமாகப் பேசினார் மஹிந்த ஐ. தே.க செயற்குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டிற்கு பாரிய சேவை செய்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாஸவை அவமானமாக பேசியதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.



கட்சியின் தீர்மானங்கள் மற்றும் புதிய பதவி நிலைகள் தொடர்பாக கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதிரணிசிங்க பிறேமதாஸுவுக்கு அவமானம் ஏற்படும் வகையில் உரையாற்றியிருந்தார்.

அதாவது ரணசிங்க பிறேமதாஸா கொல்லப்பட்டதுடன் மக்கள் பாற்சோறு உண்டதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதனை நாங்கள் வன்மையாகக்கண்டிக்கின்றோம். கட்சிக்கு நீண்ட காலமாக சேவையாற்றிவரும்எம்.எச். மொஹம்மட் அலிக் அலுவிஹாரே மற்றும் தர்மதாஸ பண்டா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



கட்சி மறுசீரமைப்பு வேலைத் திட்டத்திற்கு செயற்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அத்துடன் கட்சிக்குத்தேவையான அதிகாரிகள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வாரங்களில் வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளதால் கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளை உப தலைவர் கரு ஜெயசூரிய மேற் கொள்வார். அரசாங்கத்தில் இணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (து)

## திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படும் மூதூர் தமிழ் மக்கள் நிவாரண உதவியின்றி தவிக்கும் 55 ஆயிரம் மக்கள்

(கொழும்பு)

மூதூர்தெற்கில்உள்ள 15ஆயிரம்தமிழ்மக்கள்கடந்த 8நாட்களாக எந்தவித நிவாரணங்களும், உதவிகளுமின்றி நிர்க்கதியாகியுள்ளனர் என்று தெரிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பி துரைரத்தினசிங்கம் மூதூர் தாக்குதலின் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள் , அதிகாரிகள் மேற்படி மக்களின் நிலைமை தொடர்பாக கரிசனை செலுத்தாததன் நோக்கம் என்ன என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

மூதூர் நிலைமை தொடர்பான சபையின் ஒத்திவைப்பு பிரேரணைமீது உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

மூதூர் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மூதூர் தெற்கில் உள்ள இருதயபுரம், மணற்சேனை, பெரியவெளி மல்லிகைத்தீவு, தங்குவேலி, சிவபுரம், முன்னம் போடி வெட்டை உட்பட பத்து தமிழ் கிராமங்களில் உள்ள 15ஆயி ரம் தமிழ் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

கடந்த 8 நாட்களாக இந்தக்கிராமங்கள் வெளித்தொடர்புகள் அற்ற நிலையில் துண்டிக்கப்பட்டுள்ளன. இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசங்களான இந்தக் கிராமங்களுக்கு இது வரையும் எந்த வித நிவாரணங்களோ உதவிகளோ கிடைக்க வில்லை.

அந்த மக்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதை இராணுவத்தினர் தடுத்துவருகின்றனர். இராணுவமும் புலிகளும் தாக்குதலை நிறுத்திய பின்னர் அங்கிருந்த இடம்பெயர்ந்த மக்களை பார்ப்பதற்காகவும் நிவாரணங்களை வழங்குவ தற்காகவும் அங்கு சென்ற அமைச்சர்கள், அதிகாரிகள் மூதூர் தெற்கில் நிர்கதிக்குள்ளாகியிருக்கும் 15 ஆயிரம் தமிழ் மக்கள் பற்றி எந்தவித கரிசனையும் செலுத்தவில்லை.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அமைச்சர்கள், அதிகாரிகள் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவதையிட்டு நாங்கள் பாராட்டுகின்றோம். அது மனிதாபிமானப் பிரச்சினை அதேபோன்று மேற்படி 15ஆயிரம் தமிழ் மக்களும் மனிதாபிமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அவர்கள் பக்கமும் அமைச்சர்கள் அதிகாரிகளின் மனிதாபிமானம் திரும்ப வேண்டும். பக்க சார்பாக இருக்கக்கூடாது தோப்பூரி லும் முஸ்லிம்மக்கள் இடம்பெயராது இருந்தமையினால் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களும் அவர்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் கிடைக்க வில்லை.

அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளான மூதூர் கிழக்கில் உள்ள ஈச்சிலம்பற்று, வெருகல், கதிரவெளி போன்ற பிரதேசங்களில் 40 ஆயிரம் மக்கள் கடந்த 6 மாதங்களாக பொருளாதார தடைக்கு உள்ளாகியுள்ளனர். நிவாரணங்களும் இல்லை 55ஆயிரம் தமிழர்கள் நிவாரண நடவடிக்கைகளில் திட்டமிட்டுப்புறக்கணிக்கப்படுகின்றனர். (து)

## ஜே.வி.பி.யின் 20 அம்சக்கோரிக்கைகள் பதிலளிக்காது மஹிந்த அரசு மௌனம்

(கொழும்பு)

10 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் ஜே.வி.பி. சமர்ப்பித்த 20 அம்சக் கோரிக்கை குறித்து மஹிந்த அரசிடமிருந்து பதில் எதுவும் கிடைக்காததால் ஜே.வி.பியினர் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத்தெரிகிறது.

இலங்கையை கட்டியெழுப்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுடன் கைகோர்த்துசெயற்பட முடிவெடுத்ததாக தெரிவித்த ஜே.வி.பி அதற்கான முன் நிபந்தனையாக தங்களது 20 அம்சக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என மஹிந்த அரசுக்கு நிபந்தனை விதித்தனர்.

தற்போதைய நிலையில் தங்களது கோரிக்கையை இலகுவாக மஹிந்த ஏற்றுக்கொள்வார் என்றும் ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் எந்தப்பக்கமும் அசையமுடியாமல் திக்குமுக்காடும் மஹிந்த தங்களது வலையில் சிக்கிக்கொள்வார் என்றும் இறுமாப்படைந்திருந்த் ஜே.வி.பியினர் இரண் டாவதுவாரமும் பதில் கிடைக்காத நிலையில் அதிர்ச்சியடைந் துள்ளனர்.

ஜே.வி.பி.விடுத்த சில கோரிக்கைகளை கொள்கையளவில் மஹிந்த அரசு நிராகரித்து இருப்பதாக உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிப்பதாக கூறிய ஜே.வி.பி. நாடாளு மன்ற உறுப்பினர் அனுர குமார திஸநாயக்க எவ்விதபதி லும் அரசிடம் இருந்து இதுவரை கிடைக்காத்து தமது கட்சிக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும் கூறினார்.

யுத்தநிறுத்தத்தை நிராகரித்து நோர்வே அனு சரணையை ரத்து செய்தல், போரை உடனே ஆரம்பித்தல், தமிழர் பிரதேசங்கள் மீது பொருளாதார தடைகளை வலுப்படுத்தல் ,வடக்கு கிழக்கைப் பிரித்தல், விடுதலைப் புலிகளை இலங்கையில் த்டைசெய்தல் போன்றவை உட்பட மொத்தம் 20 நிபந் தனைகளை ஜே.வி.பி உருவாக்கி அதன் செயற்பாட்டை மஹிந்த ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அரசுடன் இணைய ஆயத்தமாகவுள்ளதாக தெரிவித்தது. மஹிந்த அரசுக்கு வேறு எந்தவொரு அனுகூலமான அரசியல் சூழலும் காணப் படாததால் அவரை இலகுவாக தங்கள் வலையில் சிக்கவைக்கலாம் என திட்டமிட்டு முயற்சி செய்த ஜே.வி.பி தற்போது எப்படி மாற்று யுத்தியை கையாண்டு மஹிந்தவை தங்கள் வலையில் விழுத்தலாம் என திட்டமிட ஆயத்தமாகிறது.

விரைவில் அரசுடன் கூட்டணி அமைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஜே.வி.பியை சந்தித்து விவாதிக்கக்கூட மஹிந்த அரசு அழைக்காதமை மிகப்பெரிய ஏமாற்றம் என அனுரகுமார திஸநாயக்க கூறினார். (து)

## கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தி வரும் ஆன்மிக நிகழ்வு தொடரில் இன்று மு.ப.10மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும்.(து-35)

## எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப சிங்கள மொழி கற்றல் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.(து-113)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரின் உட்பகுதிகளில் , பிரதானமாக கச்சாய் வீதியில் கட்டாக்காலி நாய்களின் தொகை அதிகரித்து மாலை நேரங்களில் அவ் வீதியினூடாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி நகரசபையின் நாய் பிடிப்பாளர்கள் நகர்ப் புறங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடிப்பதில் கவனம் செலுத்துகிறார்களேயன்றி நகரின் உட் புறங்களில் திரியும் நாய்களைப் பற்றிக் கவனிப்பதில் லையென்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது. எனவே , சாவகச்சேரி நகரசபை இவ்விதம் கட்டாக் காலிகளாகத் திரியும் நாய்களை பிடித்து அழிக்க நடவ டிக்கை எடுக்கவேண்டுமென நகரசபை நிர்வாகத்தை மக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். (து-70)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒழுங்கான உண்மையான வாழ்க்கை வாழ்பவர்களால் மட்டுமே ஆத்ம சாதனை பழகமுடியும். பெரும்பாலும் அறக் கருத் துக்களும் ஆன்மீகக் கருத்துககளும் நமக்கு உதட்டளவிலேயே இருக்கின்றன. இந்த நிலையில் நாம் எப்படி சாதனை பழகமுடியும்?

சுவாமி விவேகானந்தர்

## தாக்குதல்களுக்கு அஞ்சி

# 40 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு

# அடிப்படை வசதிகளின்றி அவலம்

(திருகோணமலை)

திருகோணமலை, மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேசங்களிலிருந்து 40 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மக்கள் சென்று கொண்டிருக்கும் பாதைகளை குறிவைத்தே ஆட்லறி எறிகணை வீச்சு மற்றும் கிபீர் விமானக் குண்டு வீச்சு தாக்குதல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இராணுவத்தினரால் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து அப்பகுதிகளிலுள்ள சுமார் 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்கள் பாடசாலைகளிலும் சமயத் தலங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். அகோரச் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களினாலேயே தாம் இடம்பெயர்ந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் இடங்கள் மீது விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வதாக மக்கள் தெரிவித்தனர்.

எனினும் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாக இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை கண்காணிப்புக் குழு உட்பட உதவி வழங்கும் நிறுவனங்கள் எதனையும் இடம்பெயர்ந்த மக்களைப் பார்க்க இராணுவம் அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடங்களுக்குச் செல்ல தம்மை அனுமதிக்காததால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எதனையும் தம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை மோதல் நடக்கும் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி விநியோகம் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் உதவிப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு இராணுவம் அனுமதி மறுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானக் குண்டு மற்றும் எறிகணை தாக்குதல் காரணமாக எதனையும் எடுத்து வராத அவர்கள் ஒரு நேர உணவுக்கே வழியில்லாத நிலை தோன்றியுள்ளதாக உதவி வழங்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அரச அதிபர் தலைமையில் உணவுப் பொருட்களுடன் சென்ற 20 லொறிகள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ச-5)

## திருகோணமலை வெற்றியே தமிழீழ தேசத்தின் வெற்றி

### பொட்டம்மான் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

திருகோணமலையை வெற்றி கொள்வதிலேயே தமிழீழத்தின் வெற்றி தங்கியுள்ளது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான் தெரிவித்துள்ளார்.

லெப்.கேணல் குஞ்சனின் வீரவணக்க நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழத்தின் விடுதலைக்காக 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் நிலை வளர்ச்சிக்கும் உலகத் தமிழர்களின் வீரத்தின் வெளிப்பாட்டிற்கும் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர்.

தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வேரூன்றலுக்கும் வளர்ச்சிக்கும் காரணமான அடித்தளத்தை இட்டத்தில் குஞ்சன் முக்கியமானவர். திருகோணமலை தமிழீழத்தின் தலைநகரம் என்பது பேச்சளவில் இல்லாமல் இன்று அது ஒரு களநிலை யதார்த்தமாக சிங்கள அரசுக்கு உணர்த்தப்படுகின்ற வீரமிக்க போராட்ட களமாக மாற்றப்பட்டுள்ளது என்றார் அவர். (எ-5)

## பிரதான வீதிகளை மூடி மாணவர் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் பிரதான வீதிகள் சிலவற்றை மூடி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவ முகாம்களை பாடசாலைகளுக்கு அருகில் இருந்து அகற்றுமாறும் கல்லூரி மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி உட்பட்ட வீதிகளை சில நிமிட நேரம் மூடி வைத்திருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, மாணவர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். (து-133)

### குடும்பஸ்தர்...

வசந்தகுமார் (வயது 31) என்பவராவார்.

சூட்டுச் சத்தத்தைக்கேட்டு தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றிலிருந்து வீதிக்கு வந்த ஐயாத்துரை செல்வதீபன் (வயது 28) என்பவர் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொலைச்சம்பவம் நடைபெற்ற இடத்தை பார்வையிட்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (து-133)

### இராணுவ...

இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. அவ் ஆயுதக்களஞ்சியம் வெடித்தமைக்கான காரணம் குறித்து கண்டறியப்படவில்லை எனவும் அது குறித்து இராணுவத்தரப்பில் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ச-5)

### கிளைமோரில்...

படுகாயமடைந்தனர்.

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் இடம்பெற்றது. இச் சம்பவத்தையடுத்து கே.கே.எஸ்.வீதியூடான போக்குவரத்துக்களும் சம்பவம் இடம் பெற்ற வீதியும் மூடப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச-133)

### மாவிலாறு...

கேள்வி எழுப்பினார்.

மூதூர் மற்றும் சேருநுவர பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து துன்பப்படும் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்களின் பிரச்சினைகளையும் அரசு உடனடியாக பக்கசார்பின்றி கவனிக்க வேண்டு மென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ச-5)

### மத்திய கல்லூரி மாணவர்கள்...

களுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து நேற்றுப் பகல் 10.45 மணியுடன் பகிஷ்கரிப்பு போராட்டம் கை விடப்பட்டது.

யாழ்.பொலிஸ் அத்தியட்சகருடன் பாதையைத்திறந்து விடுதல் சம்பந்தமாக நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது மணிக்கூட்டு கோபுர வீதியை காலை 7 மணியிலிருந்து 8.30 மணிவரையும் நண்பகல் 12 மணியிலிருந்து 3 மணிவரையும் பாடசாலை மாணவர்கள் இப் பாதையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

மற்றைய இரண்டு கோரிக்கை தொடர்பாக யாழ்.மாவட்ட 51 ஆவது படைப்பிரிவு தளபதியுடன் மாணவர்கள் பேச்சுவார்த்தை நடாத்தியபோது நிலைகொண்டுள்ள முகாம்களை அகற்றுவதற்கு பதிலாக நகர்த்துவது பற்றியும் விடுதியில் தங்கியுள்ள இராணுவத்தினர் தொடர்பாகவும் பலாலி இராணுவத்தளபதியுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக மாணவர்களுக்கு உறுதியளித்தார். இந்த உறுதி மொழியையடுத்து மாணவர்களது பகிஷ்கரிப்ப போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிகிறது. (து-133)

### கிழக்கில் உக்கிர மோதல்...

இத் தாக்குதல்களில் ஏழு விடுதலைப் புலிகளின் போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் பத்துப் போராளிகள் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

இதேவேளை தமது தரப்பில் ஐந்து படையினர் கொல்லப்பட்டதாகவும் 25 பேர் காயமடைந்ததாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திற்கு ஆதரவாக விமானப் படை விமானங்களும் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவிலாற்றுப் பிரதேசத்தை தாம் கைப்பற்றியதாக இராணுவம் தெரிவித்த போதிலும் விடுதலைப்புலிகள் அதனை மறுத்துள்ளனர்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உக்கிரமாக நடந்து வரும் சண்டையில் 41 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 130 இராணுவத்தினர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

கந்தளாய் மருத்துவமனையில் மேலதிக மருத்துவர்கள், தாதிகள் சிறப்புத் சேவை க்கு அமர்த்தப்பட்டபோதும் அங்கு ஆட்பற்றாக் குறை நிலவுவதாகவும் கட்டில்கள் போதாக் குறை நிலவுவதாகவும் பிறிதொரு சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மாவிலாறு அணையைக் கைப்பற்றும் வரை தாக்குதல்கள் தொடரும் என இராணுவம் தெரிவித்துள்ளது. (ச-5)

### வான், ஷெல் தாக்குதல்களில்...

திருகோணமலை மாவிலாறு நோக்கி இராணுவத்தினர் நேற்று ஆரம்பித்துள்ள பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கையின் போது விமானப்படையினர் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களிலும் எறிகணை வீச்சுத் தாக்குதல்களிலும் 120க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

திருகோணமலை கல்லாறு இராணுவ முகாமிலிருந்து மாவிலாறை நோக்கி பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஈச்சிலம்பற்று, கதிரவெளி பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான ஆட்லறி எறிகணை வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தினருடன் இணைந்து விமானப்படையினரும் தாக்குதல்களை நடத்தினர்.

முன்னேறி வரும் படையினரை வழிமறித்து விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்துகின்றனர் என விடுதலைப்புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எறிகணை மற்றும் விமானக் குண்டு வீச்சு தாக்குதல்களில் உயிரிழந்த சுமார் 120 பொது மக்களின் சடலங்கள் ஈச்சிலம்பற்றுப் பகுதியில் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)


## உடன் தேவை

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

சொந்தமாகமோட்டார்சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.



## பதவி வெற்றிடம்

**பொது முகாமையாளர்**

35-55க்கு வயதிற்குட்பட்டவர்கள் (மும்மொழித் தொடர்பாடல் உள்ளவர்களுக்கும் முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 12.08.2006க்கு முன்னதாக நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி, இல. 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.